DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**Case No: CC.No. 64/2021**

Deposition of witness for Prosecution அ.சா.3

Name : மோகன்
Father/ Husband Name : சந்தவடியான்
Village :
Taluk :
Calling :
Age :

எதிரி ஆஜர்

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 06.08.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் தற்போது திருவேகம்பத்துார் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 20.11.2020 என்று சாட்சி கூறிவிட்டு தற்போது 29.11.2020ம் தேதி மதியம் 03.45 மணிக்கு வடக்கு போர்குடியில் சாரதா கொடுத்த புகார் மனு காரணமாக நானும் முதல் நிலைக்காவலர் 2180 ஜோபிரவின் என்பவரும் சம்பவ இடம் சென்று விசாரித்த போது அங்கு நின்று கொண்டிருந்த ஆஜர் எதிரி கருப்பையா என்பவர் எங்களை தடுத்தி நிறுத்தி நாங்கள் பேசிக் கொள்கிறோம் நீங்கள் எதற்காக வந்தீர்கள் என்று வழிமறித்து தடுத்து அசிங்கமாக பேசினார். அதை ஜோபிரவின் என்பவர் செல்போனில் வீடீயோ எடுத்தார். அந்த வீடீயோவை ஆஜர் எதிரி கருப்பையா தடுத்து தட்டிவிட்டார். அதன் பின் உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்து காவல் நிலையம் வந்துவிட்டோம். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் முதல் விசாரணையில் சொன்னதை தான் சார்பு ஆய்வாளர் விசாரணையில் கூறினேன் என்றால் சரிதான். சாரதா புகார் யார் மேல் கொடுத்திருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. சாரதா கொடுத்த புகார் மனுவை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். நாங்கள் எங்கு இருக்கும் பொழுது

எங்களை காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு போகச் சொன்னார் என்றால் காவல் நிலையத்தில் இருக்கும் பொழுது. நாங்கள் சம்பவ இடம் சென்று சாரதாவையோ, எதிரியையோ அல்லது சாரதாவுடன் பிரச்சனை செய்ததாக வேறு எந்த நபரையோ காவல் நிலையத்திற்கு அழைத்து வரவில்லை என்றால் சரிதான்.

2. சம்பவ இடத்தில் சாரதாவுடன் யார் பிரச்சனை செய்தார் என்ற விவரத்தை விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை, எங்களை விசாரிப்பதற்கு போகவிடவில்லை. அதன்பிறகு கூடுதல் போலீசாரை வரவைத்து எதிரியை சம்பவ இடத்தில் வைத்து கைது செய்ய ஏதாவது முயற்சி எடுத்தேனா என்றால் இல்லை, சார்பு ஆய்வாளரிடம் சொன்னோம் அவர் திரும்ப வரச் சொல்லிவிட்டார்.

3. தலைமைக் காவலர் ஜோபிரவின் வீடியோ பதிவை சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்துள்ளார். நாங்கள் சம்பவம் இடத்திற்கு போகும் போது எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 4-5 நபர்கள் இருந்தார்கள். நான் எதுவும் புகார் கொடுக்கவில்லையென்றால் ஜோபிரவினை தான் தட்டிவிட்டார் அதனால் அவர் புகார் கொடுத்தார். தலைமைக் காவலர் கொடுத்த புகாரில் என்ன எழுதி இருந்தார் என்று எனக்கு தெரியாது.

4. நான் காவல்நிலையத்தில் இருந்து தான் சம்பவ இடத்திற்கு சென்றதால் அன்றைய பொது நாட்குறிப்பில் அதை பதிவு செய்தேனா என்றால் சார்பு ஆய்வாளர் பதிவு செய்திருப்பார். பொது நாட்குறிப்பை பார்த்தால் உண்மையிலேயே வடக்கு போர்குடிக்கு சென்றேனா என்று தெரியவரும். இந்த வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளரிடம் தகவல் சொன்னேனா என்றால் நான் சார்பு ஆய்வாளரிடம் சொன்னேன், சார்பு ஆய்வாளர் தாலுகா வட்ட ஆய்வாளரிடம் சொல்லியிருப்பார்.

5. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், உண்மையிலேயே நடந்திருந்தால் தேவகோட்டை தாலுகா வட்ட ஆய்வாளரிடம் புகார் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றும் எதிரி என்னை வழிமறிக்கவில்லை என்றும் அ.சா.1 எந்த வீடியோவும் எடுக்கவில்லை என்றும் அதை எதிரி தடுக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரியை சிறையில் அடைக்க வேண்டும் என்பதற்காக என் மேலதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்காக அ.சா.1 கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு எதிரியின் மீது போடப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.